**R 5773**

## As Deceivers And yet True

# எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் (உண்மையுள்ளவர்)

*“இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல்...... கனத்திலும் கனவீனத்திலும் துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும்.” 2 கொரிந்தியர் 6:3,8*

சுறுசுறுப்பான ஒரு கிறிஸ்தவனின் அனுபவங்கள் எப்படி பலதரப்பட்டதாக இருக்கின்றன! கனம் மற்றும் கனவீனம் நல்ல அறிக்கையிடப்படுதல், கெட்ட அறிக்கையிடப்படுதல், நீதியின் நிமித்தம் துன்பப்பட்டு ஏமாற்றுக்காரன் முதலான வார்த்தைகளால் அழைக்கப்படுதல் போன்ற அனுபவங்கள். மற்றவர்களைக் காட்டிலும் சிலர் அதிக விளம்பரம் பெற்று இப்படியாக அதிக கவனத்தை இழுப்பார்கள். மற்றவர்களை காட்டிலும் சிலர் பலவகையான பரந்த ஊழியத்தையும் பெரும் சந்தர்ப்பங்களையும் பெற்றிருப்பார்கள். ஆனால் நமது தலைப்பு வசனத்திலும் அதன் சந்தர்ப்பத்திலும் விவரிக்கப்பட்டுள்ளபடி உண்மையுள்ள ஒவ்வொரு கிறிஸ்துவின் சீஷனும் ஏறக்குறைய இந்த அனுபவங்களை பெறுவார்கள். சிலர் நம்மைக் குறித்து நல்ல விதமாக பேசுவார்கள். சிலர் தீமையாக பேசுவார்கள். “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” என்பது சுவிசேஷயுகம் முழுவதும் எப்பொழுதும் உண்மையாய் இருக்கிறது. (2 தீமோத்தேயு 3:12) இன்னும் இந்த கடைசி நாட்களில் இது மிகவும் உண்மையாயிருக்கிறது.

கிறிஸ்துவின் சகோதரருக்குள், கர்த்தரின் பரிசுத்தவான்கள் அனைவரும் கனம் பெற வேண்டும். சகோதரரின் கனத்தை யாரும் தேடக்கூடாது. எனினும், தேவனிடம் முழுமையாக அர்ப்பணம் செய்ய பெரும் முயற்சி எடுத்தவர்கள், மாம்ச பிரகாரமாக இழிவானவர்களாக இருந்தாலும் ஒரு பெரிய மதிப்பு அவர்களிடம் இணைந்திருக்க வேண்டும். தேவன் தமதும் ஆவியால் யாரையாவது ஜெநிப்பித்திருக்கிறார் என்கிற உண்மை நம்மை அவர்களை மதிக்க விருப்பங் கொள்ள வைக்க வேண்டும். கர்த்தர் இவர்களை இப்படியாக கனப்படுத்தியிருக்கிறார். பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் எளிமையானவர்களாக இருந்தாலும். நமது கர்த்தராகிய இயேசுவினால் மிகவும் நேசிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும், தங்களது சகோதரர்களில் சிறியவர்களில் கடைசியானவர்களைக் கூட எப்படி நடத்துகிறோம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

“எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர்.” அநேக சந்தர்ப்பங்களில் மகா அப்போஸ்தலர் பவுல் அவமதிக்கப்பட்டார். மற்ற நேரங்களில் அவர் கனப்படுத்தப்பட்டார். அவரைப் பற்றிய கெட்ட அறிக்கைகளும் நல்ல அறிக்கைகளும் வெளி தேசங்களில் பரவின. தேவனுடைய ஜனங்களாக ஊழியம் செய்பவர்களால் ஏமாற்றுபவராக கருதப்பட்டார். ஆனால் எல்லா சமயத்திலும் அவர் கர்த்தருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் உண்மையுள்ளவராக இருந்தார். அவர் யூத மதத்தை விட்டு ஓடியவராக கருதப்பட்டார். ஏனெனில் நித்திய ஜீவனுக்கு ஒரே நம்பிக்கையாக இருந்த நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்படி போதிக்கவில்லை. கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தில் விசுவாசம் வைப்பதின் மூலம் கிடைக்கிற மிகவும் உன்னதமான இரட்சிப்பை போதித்துக் கொண்டிருந்தார். இந்த போதனை நியாயப் பிரமாணத்தை தாழ்ந்ததாக காணப்படச் செய்தது. ஆகையால் அவரது சக யூதர்கள், அவர்களது பிதாக்களின் பிரமாணத்திற்கு உண்மையாய் இருக்கவில்லை என்று அவரை குற்றஞ்சாட்டினார்கள். ஒரு யூதனுக்கு இது ஒரு பெரும் அவமரியாதையாய் கருதப்பட்டது.

இதன் பலனாக பரிசுத்த பவுலைப்பற்றிய கெட்ட அறிக்கைகள் எல்லா இடங்களிலும் அவிசுவாசமுள்ள யூதர்களிடையே பரம்பியது. எக்காலத்திற்கும் அவர் ஒரு பெரிய ஏமாற்றுக்காரனாக முத்திரையிடப்பட்டார். அவருக்கு எதிராக ஒவ்வொருவரும் எச்சரிக்கப்பட்டார்கள். “அந்த மனிதன் பவுல் வருகிறானா என்று கவனியுங்கள். அவனைக் கொல்லுகிறவன் தேவனுக்கு ஊழியம் செய்து அவரது நாமத்தை மகிமைப் படுத்துகிறான்!” “ஏன்,” என்று சிலர் கேட்கலாம். “ஏனெனில், அவன் நசரேயனாகிய இயேசுவே மேசியா என்றும் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தால் இந்த மனுஷன் இயேசு மூலம் உயிரடைவோம் என்றும், பதினாறு நூற்றாண்டுகளாக நாம் பெற்றிருந்த நியாயப்பிரமாணத்தால் எந்த வித பிரயோ ஜனமுமில்லை என்றும் கூறி ஜனங்களை வஞ்சிக்கிறான். ஜனங்கள் அந்த நசரேயனை பின்பற்றும்படி முயற்சி செய்கிறான்.”

மேலும் பரிசுத்த பவுல் தன்னைப் பின்பற்றும்படி அநேகரை இழுக்க முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டினார்கள். எனினும் அவர் ஒவ்வொரு வார்த்தையிலும் தேவனுக்கு உண்மையாயிருந்தார். அவர் இஸ்ரயேல் தேசத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும், தீர்க்கதரிசிகளுக்கும்

உண்மையாயிருந்தார். அவர் தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் உண்மையாயிருந்தார். அவர் எந்த விதத்திலும் ஏமாற்றுக்காரனாக இல்லை; இப்பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டிருந்தவர்களால் ஏமாற்றுக்காரன் என்று அழைக்கப்பட்டார். குருடாக்கப்பட்ட யூத சகோதரர்களுக்கும் தவறான தேவர்களுக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கும் அவர் "ஒரு ஏமாற்றுக்காரனாக" காணப்பட்டார்.

## மற்றவர்களுக்காக இணங்குதல்

"ஊழியம் குற்றப்படாதபடிக்கு, யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல்" இருப்பதே அப்போஸ்தலரின் விருப்பமாகவும், முயற்சியாகவும் இருந்தது. ஊழியம் என்ற வார்த்தை அடிக்கடி இன்றைய நாளில் குருத்துவத்தை முழுமையாக குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. சபைகளின் ஊழியர்கள் அல்லது போதகர்கள் ஊழியம் என்று பேசப்படுகிறார்கள். அதாவது பிரஸ்பட்டேரியன் ஊழியம், மெதடிஸ்ட் ஊழியம் முதலியவைகள். ஆனால் பரிசுத்த பவுல் ஒரு பரந்த எண்ணத்தை உடையவராயிருந்தார் என்று நாங்கள் நினைக்கிறோம். அதாவது கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்தை அறிவிப்பது அல்லது வேறு எந்த வழியிலாவது கர்த்தருக்கு ஊழியம் பண்ணுவது சேவை என்ற அர்த்தத்தில் தான் அந்த வார்த்தையை அவர் பயன்படுத்தினார். ஒரு ஊழியன் ஒரு வேலைக்காரனாக இருக்கிறான். கர்த்தருக்கு வெளிப்படையாகவோ அல்லது தனிப்பட்டோ சேவை செய்கிறவர் ஊழியக்காரர்கள், உண்மையுள்ள ஒரு வாழ்க்கையை, கனம் பொருந்திய ஒரு வாழ்க்கையை வாழ முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் ஏமாற்றுகாரர்கள் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையான வாழ்க்கையை வாழ வேண்டும். எனினும் மற்றவர்கள் அவர்களது மேன்மையான நடக்கையை கவனிப்பார்கள். ஒவ்வொருவரும் குற்றமில்லாத முறையில், உலகம் நல்ல, சரியான வாழ்க்கை என்றும் சொல்லும்படி வாழ முயற்சிக்க வேண்டும். நிந்தனைக்கு மேலாக வாழ வேண்டும். குற்றத்திற்கு இடமளிக்கக் கூடாது. நாம் குற்றம் இழைந்திருக்கிறோம் என்று ஒருவர் சொல்லுகிறதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பதே அப்போஸ்தலரின் எண்ணமாக இருக்கிறது.

யூதர்களுக்குள்ளே யாராவது பன்றி மாமிசம் சாப்பிட்டால் அது ஒரு குற்றமாக இருக்கும். அவன் கீழ்ப்பட்டவனாகவும் மத நம்பிக்கை அற்றவனாகவும் கருதப்படுவான். ஆனால் நமது காலத்தில் பன்றி மாமிசம் சாப்பிடுவதை அநேகர் குறை கூற மாட்டார்கள். ஆனால் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக ஆசரிக்கத் தவறினால், அது தேவ கட்டளையை மீறினதாகக் கருதப்படும். நமது மனசாட்சிக்கு ஏற்றவாறு இதுவரை நாம் சில காரியங்களை செய்கிறோம். ஆனால் இப்படி செய்வதால் ஊழியம், சத்திய சேவை குற்றப்படுத்தப்படும். அநேகர் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக ஆசரிக்க மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாக முடிந்தவரை, நமது நடக்கைகளில் உண்மைத் தன்மையின் உச்சத்திற்கு செல்ல ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு கட்டளையிடுகிறார். ஒரு தனிப்பட்டவரது மனசாட்சியுள்ள பண்புகள் லேசாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

உலகின் சில பகுதிகளில் வீட்டிற்குள் நுழைவதற்கு முன் காலணியை கழற்றுவது ஒரு வழக்கமாக இருக்கிறது. நாம் அந்த பகுதியில் இருந்தோமானால் அந்த வழக்கத்தை பொதுவானதாக உறுதிப்படுத்த வேண்டும். நம்மைச் சுற்றி இருக்கிறவர்களின் வழக்கத்தை நமது மனசாட்சிக்கு விரோதமில்லாமல் ஆசரிக்க நாம் விருப்பம் உள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும். அவர்களது வழிமுறையை உறுதிப்படுத்துவதின் மூலம் குற்றத்தை நாம் தவிர்த்து, நன்மையான செல்வாக்கை அதிகப்படுத்துவோம்.இதைச் செய்யத் தவறினால், அன்பிலும் இரக்கத்திலும் குறைவுள்ளதாயிருக்கும். ஆகையால் எப்படியோ அது கர்த்தரினிமித்தம் ஒரு தீமையாக இருக்கும்.